1. COVID தொற்றுநோய்க்கான நாசிவழி ஊக்கத் தடுப்பூசியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள 'iNCOVACC'ஐ தயாரிக்கின்ற நிறுவனம் எது?

அ. சீரம் இந்தியா நிறுவனம்

ஆ. பயோலாஜிக்கல் E லிட்

இ. பாரத் பயோடெக் ☑

ஈ. பயோகான்

✓ 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஊக்கத்தவணை தடுப்பூசியாக பாரத் பயோடெக்கின் நாசிவழி செலுத்தக்கூடிய தடுப்பூசியை நடுவண் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் அங்கீகரித்துள்ளது. இந்தியாவில் தடுப்பூசி செலுத்திக்கொள்ள பதிவுசெய்துகொள்ளும் இணையதளமான 'CoWin' செயலியில் இந்தியாவின் முதல் நாசிவழி COVID தடுப்பூசியான 'iNCOVACC' சேர்க்கப்படும். தற்போது, பாரத் பயோ டெக்கின் கோவாக்ஸின், சீரம் இந்தியா நிறுவனத்தின் கோவிஷீல்ட் மற்றும் கோவோவாக்ஸ், ரஷிய ஸ்புட்னிக்-V மற்றும் பயோலாஜிக்கல் E லிட் இன் கோர்பிவாக்ஸ் ஆகியவை CoWin இணையதளத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன.

2. 'அரசுத்துறையில் சிறந்த பாதுகாப்பு நடைமுறைகளுக்கான' DSCI AISS விருதை வென்ற நிறுவனம் எது?

அ. இந்திய இரயில்வே

ஆ. UIDAI ☑

இ. ISRO

ஈ. NASSCOM

✓ இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) 'அரசுத்துறையில் சிறந்த நடைமுறைகளுக்கான சிறந்த தரவுப் பாதுகாப்பு விருதைப்' பெற்றுள்ளது. இந்திய தரவுப்பாதுகாவல் கழகம் (DSCI) என்பது NASSCOM அமைப்பால் இந்திய நாட்டில் தரவுப்பாதுகாப்பிற்காக நிறுவப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும். குடிகளுக்கு டிஜிட்டல் அடையாள அடிப்படையிலான நலன்புரி சேவைகளை வழங்கும், 'ஆதார்' உட்கட்டமைப்பைப் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்கியதற்காக DSCI UIDAIக்கு இவ்விருதை வழங்கியது.

3. பன்னாட்டு நிதிக் கழகம் (IFC) இந்தியாவிலுள்ள கீழ்க்காணும் எந்த நிறுவனத்திற்கு $400 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடனை வழங்கியுள்ளது?

அ. பாரத வங்கி

ஆ. கேன் ஃபின் ஹோம்ஸ்

இ. HDFC ☑

ஈ. LIC ஹவுசிங் ஃபைனான்ஸ்

✓ பன்னாட்டு நிதிக்கழகம் (IFC) அடமான சேவைகள் வழங்கும் நிறுவனமான HDFC-க்கு $400 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடனை வழங்கியுள்ளது. இந்தக்கடன் நகர்ப்புறங்களில் வீடு கட்டுதலில் உள்ள இடைவெளியை குறைத்தற்கும், பசுமை வீடுகளை அதிகரிப்பதற்கும், வேலைவாய்ப்புகளை உருவாக்குதற்கும் நீண்டகால வணிக வளர்ச்சியை உறுதிசெய்வதன்மூலம் காலநிலை-திறன்மிகு வீடுகளுக்கான அணுகலை மேம்படுத்தவும் உதவும்.

4. 2023-FIH ஆடவர் ஹாக்கி உலகக்கோப்பைக்கான இந்திய அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ. ஹர்மன்பிரீத் சிங் ☑

ஆ. P R ஸ்ரீஜேஷ்

இ. அமித் ரோஹிதாஸ்

ஈ. ருபிந்தர் பால் சிங்

✓ FIH ஆடவர் ஹாக்கி உலகக்கோப்பைக்கான 18 பேர்கொண்ட இந்திய அணிக்கு ஹர்மன்ப்ரீத் சிங் கேப்டனாக நியமிக்கப்பட்டார். ஒடிஸாவின் புவனேசுவரம்–ரூர்கேலாவில் 2023 ஜன.13–29 வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ள FIH ஆடவர் ஹாக்கி உலகக்கோப்பைக்கான அணியை ஹாக்கி இந்தியா அறிவித்தது. இந்த நிகழ்விற்கு அமித் ரோகிதாஸ் துணைத்தலைவராக இருப்பார். ரூர்கேலாவில் புதிதாக கட்டப்பட்ட பிர்சா முண்டா அரங்கில் இந்திய ஹாக்கி அணி தனது தொடக்க ஆட்டத்தை ஸ்பெயினுக்கு எதிராக விளையாடும்.

5. இந்தியாவிற்கு S–400 வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பை வழங்குகிற நாடு எது?

அ. அமெரிக்கா

ஆ. இஸ்ரேல்

இ. ரஷ்யா ☑

ஈ. பிரான்ஸ்

✓ அடுத்த ஆண்டு ஜனவரி அல்லது பிப்ரவரியில் S–400 வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பின் மூன்றாவது படைப் பிரிவை ரஷியா இந்தியாவுக்கு வழங்கத் தொடங்கும். இந்தியா ஏற்கனவே தனது முதல் இரண்டு ஏவுகணை அமைப்பு படைப்பிரிவுகளை லடாக் பிரிவு, மேற்கு வங்கத்தின் சிலிகுரி பாதை மற்றும் முழு வடகிழக்குப் பகுதியிலும் ரோந்துப்பணியில் ஈடுபடுத்தியுள்ளது. S–400 வான் பாதுகாப்பு ஏவுகணைகளின் ஐந்து படைப்பிரிவுகளை வாங்குவதற்கான ₹35,000 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்திற்கு இந்தியாவும் ரஷ்யாவும் ஒப்பந்தம் செய்துள்ளன.

6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற அனிஷ் தோப்பானி என்பவருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ. கிரிக்கெட்

ஆ. செஸ்

இ. பூப்பந்து ☑

ஈ. ஹாக்கி

✓ தாய்லாந்தின் நோந்தபுரியில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் பூப்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீரர் அனிஷ் தோப்பானி 15 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்றார். அனிஷ் தோப்பானி ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் சீன தைபேயின் சுங்–ஹ்சியாங் யீக்கு எதிராக தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார். இந்தியாவின் 17 வயதுக்குட்பட்ட ஆடவர் இரட்டையர்களான அர்ஷ் முகமது மற்றும் சன்ஸ்கர் ஸ்ரஸ்வத் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஆச்சார்யா ஜெகதீஷ் சந்திரபோஸ் இந்திய தாவரவியல் பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?

அ. மேற்கு வங்காளம் ☑

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. ஹிமாச்சல பிரதேசம்

ஈ. மத்திய பிரதேசம்

✓ மேற்கு வங்க மாநிலத்தின் ஹௌராவில் அமைந்துள்ள இந்தியாவின் மிகப்பெரிய தாவரவியல் பூங்காவான ஆச்சார்யா ஜெகதீஷ் சந்திரபோஸ் இந்திய தாவரவியல் பூங்கா கங்கையாற்றின் மிகக்கடுமையான நில அரிப்பு காரணமாக அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளது. சமீபத்திய தளப்பார்வையின்போது, வேலி மற்றும் உள்தோட்டத்தின் சில பகுதிகள் ஆற்றுவெள்ளத்தால் அடித்துச் செல்லப்படலாம் என்று நிபுணர்கள் எச்சரித்தனர். இத்தோட்டம் இந்திய தாவரவியல் ஆய்வகத்தின் (BSI) அதிகார வரம்பிற்கு உட்பட்டதாகும்.

8. நியூயார்க்கின் ஃபெடரல் ரிசர்வ் வங்கியின் தலைமை இயக்க அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நபர் யார்?

அ. சுஷ்மிதா சுக்லா ☑

ஆ. இந்திரா நூயி

இ. பிரீத்தி சுதன்

ஈ. கீதா கோபிநாத்

✓ இந்திய வம்சாவளியைச் சேர்ந்த காப்பீட்டுத் துறைசார் மூத்த அதிகாரியான சுஷ்மிதா சுக்லா, நியூயார்க் ஃபெடரல் ரிசர்வ் வங்கியின் முதல் துணைத்தலைவர் மற்றும் தலைமை இயக்க அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்திற்கு நியூயார்க்கின் பெடரல் ரிசர்வ் அமைப்பின் ஆளுநர்கள் குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது. அவர் 2023 மார்ச் முதல் துணைத்தலைவராகவும், தலைமை இயக்க அதிகாரியாகவும் செயல்படுவார்.

9. உலக வங்கியின் முதன்மையான பாலினக் கருவித்தொகுப்பை அறிமுகப்படுத்திய மாநகராட்சி எது?

அ. மும்பை

ஆ. சென்னை ☑

இ. கொல்கத்தா

ஈ. புது தில்லி

✓ பெருநகர சென்னை மாநகராட்சிமூலம் 'பாலினம் சார்ந்து செயல்படும் நகர்ப்புற இயக்கம் மற்றும் பொதுவெளிகளை இயக்குதல்' அடிப்படையிலான பாலின கருவித்தொகுப்பு தொடங்கப்பட்டது. உலக வங்கி மற்றும் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் இணைந்து நடத்திய அமர்வின்போது இக்கருவித்தொகுப்பு வெளியிடப்பட்டது. பெண்களின் பயணத் தேவைகளை ஆதரிக்கக்கூடிய பொதுப்போக்குவரத்து மற்றும் நகர்ப்புற இடங்களை வடிவமைப்பதற்கு இந்திய நகரங்களுக்கு வழிகாட்டுவதே இதன் நோக்கம் ஆகும்.

10. 'சர்வதேச ஊழல் எதிர்ப்பு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. டிசம்பர்.09 ☑

ஆ. டிசம்பர்.11

இ. டிசம்பர்.15

ஈ. டிசம்பர்.26

✓ "ஊழலுக்கு எதிராக உலகை ஒன்றிணைத்தல் – Uniting the World Against Corruption" என்ற கருப்பொருளின்கீழ் சர்வதேச ஊழல் எதிர்ப்பு நாள் டிச.09 அன்று அனுசரிக்கப்பட்டது. 2022 சர்வதேச ஊழல் எதிர்ப்பு நாளானது ஊழல் எதிர்ப்பு மற்றும் அமைதி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றுக்கு இடையேயான முக்கியமான தொடர்பை முன்னிலைப்படுத்த எண்ணுகிறது. ஊழலுக்கு எதிரான ஐநா தீர்மானத்தின் இருபதாம் ஆண்டு நிறைவையும் இந்த நாள் குறிக்கிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சாதனங்களைப் பழுதுநீக்க உதவும் வலைதளம்.

மின்னணு சாதனங்கள், வேளாண் கருவிகள் உள்ளிட்டவற்றை மற்றவர்களின் உதவியின்றி சுயமாகவே பழுது பார்க்க உதவும் 'ரைட் டூ ரிப்பேர்' என்ற வலைதளத்தை நடுவண் அமைச்சர் பியூஷ் கோயல் தொடக்கிவைத்தார். அந்த வலைதளத்தில் சாதனங்களின் பழுதை நீக்குவதற்கான கையேடுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலமாக, பழுதை நீக்குவதற்கு அந்தச் சாதனங்களைத் தயாரித்த நிறுவனங்களை நாடவேண்டிய கட்டாயம் இருக்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக, கைப்பேசிகள், மின்னணு சாதனங்கள், நுகர்வோர் பொருள்கள், வாகனங்கள், வேளாண் கருவிகள் ஆகியவற்றைப் பழுதுநீக்குவதற்கான கையேடுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அக்கையேடுகளை வாசித்து சுயமாகப் பழுதை சரிசெய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடுவண் நுகர்வோர் விவகாரங்கள் துறைக்கும் ஐஐடி வாரணாசிக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தமும் இதன்போது கையொப்பமானது.